**அசல் வழக்கு எண். 162/2020** **தேதி-26.06.2025**

**பி.வா.சா.1 - மன்னர் மன்னன்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்து அவருடையது என்று சொல்லி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துக்களுக்கு எனது பெயரில் கிரையம் ஏற்பட்ட விவரம் எனது தந்தைக்கு நேரடியாக தெரியும் என்றும், எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது தந்தை பெயர் K.N.ராஜு. வா.சா.ஆ.1 உள்ள கையெழுத்து எனது தந்தை கையெழுத்தா என்றால் இல்லை. எனது தந்தை மேற்படி ஆவணத்தில் உள்ளவாறு கையொப்பம் செய்யமாட்டார் என்பதை காட்ட எனது தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை இதற்கு முன்பாக பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தற்போது தான் பார்த்தேன்.

2. வாதி இவ்வழககில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துளளார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் ஒரு சில ஆவணங்களை பார்த்தேன். மேற்படி என்ன ஆவணங்களை பார்த்துள்ளேன் என்றால் பஞ்சாயத்தில் எழுதி கொடுத்த ஆவணங்களை பார்த்தேன். மேற்படி பஞ்சாயத்தில் எத்தனை ஆவணங்கள் எழுதப்பட்டது என்றால் தெரியவில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் பஞ்சாயத்தில் எழுதி கொள்ளப்பட்ட ஆவணம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அதை பார்க்கவில்லை. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தை பார்க்காமல் எனது வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் மேற்படி ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது தந்தையின் கையெழுத்து இல்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது தந்தை கையெழுத்தா என்றால் இல்லை.

3. வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்கனவே நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தற்போது தான் பார்க்கிறேன். எனது தந்தை பொதுவாக எந்த மொழியில் கையொப்பம் செய்வார். தமிழிலும் செய்வார். ஆங்கிலத்திலும் செய்வார். வா.சா-ஆ.2 ஆவணத்தில் மேற்படி கையெழுத்தின் அருகே K.N.ராஜு என்று எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் எனது தந்தையின் கையெழுத்தா என்றால் இல்லை. வா.சா-ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் ஏற்படும போது நான் மேற்படி பஞ்சாயத்தில் கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1வது சாட்சி கையொப்பம் செய்துள்ள கிருஷ்ணா ரெட்டியார் மகன் செந்தாமரை கண்ணன் என்பவர் எங்கள்

ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான்.

4. ஆனால் அவர் தற்போது உயிருடன் இல்லை. மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் 10 வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ள வேம்புடி மகன் சாமிநாதன் என்பவர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தந்தை உயிருடன் இருக்கும் போதே தாவா சொத்தை வாதியிடம் நில அனுபோக உரிமை ஒப்படைவு மூலம் ஒப்படைவு செய்துவிட்டேன் என்றும், அதனை ஒப்புக்கொண்டால் எனக்கு எதிராக இவ்வழக்கு தீர்ப்பாகிவிடும் என்றால் சரியல்ல. வா.சா-ஆ.3 ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது தந்தை கையெழுத்தா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரை உள்ள ஆவணங்களில் உள்ள மேற்படி கையெழுத்துக்கள் ஒரே மாதிரியாக தான் உள்ளது. வா.சா-ஆ.3 ஆவணத்தை நான் முன்னதாக பார்த்துள்ளேனா என்றால் இல்லை .

5. தற்போது தான் பார்க்கிறேன். வா.சா-ஆ 3 ஆவணம் உறுதிமொழி பத்திரம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் நோட்டரி பப்ளிக் முன்பு எழுதப்பட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா-ஆ.3 ஆவணம் நிலம் ஒப்புடைவு செய்ததற்கான உறுதிமொழி ஆவணம் என்றால் சரிதான். வா.சா-ஆ-1 முதல் வா.சா.ஆ.3 ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தை வாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தான் அனுபவம் செய்கிறேன். தாவா சொத்து ஆதி திராவிடர் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட பஞ்சமி நிலம் என்றும், அதனை வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு கிரையம் செய்து கொடுக்க முடியாது என்றால் சரியல்ல. வாதி என்ன தொழில் செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. வழக்குரையில் வாதி என்ன தொழில் செய்வதாக உள்ளது என்றால் வெட்டியான் தொழில் செய்வதாக உள்ளது.

6. வாதிக்கு தாவா சொத்து இலவசமாக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். வாதியின் தொழிழுக்காக மானியமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ. 1 ஆவணத்தின் மூலம் வாதி எனது தந்தைக்கு தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்திக் கொடுத்த கிரையம் பத்திரம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.சா-ஆ.1 ஆவணத்திற்கு பின்னிட்டு பஞ்சாயத்து அடிப்படையில் வா.சா-ஆ.1 முதல் வா.சாஆ.3 வரையான ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டு வாதி தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா வழக்கிற்கு 3 மாதங்களுக்கு முன்னதாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் வாதிகள் புகார் அளித்தார்கள்.

7. மேற்படி புகாரானது உரிமையியல் வழக்கு என்றும், உரிமையியல் நீதிமன்றத்தை அணுகுமாறு காவல் துறையினரால் முடித்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். நான் 10.11.2020 முதலிருந்து தாவா சொத்தை பொறுத்து வாதியின் அனுபவத்திற்கு இடைஞ்சல் கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணத்தின் படி நான் உரிமை கொண்டாடுவது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணத்தை தவிர தாவா சொத்தை அனுபவம் செய்வதை பொறுத்து எனது தரப்பில் நான் வேறு எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை தடுத்ததால் தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**

**அசல் வழக்கு எண். 176/2017** **தேதி-26.06.2025**

**வா.சா.1 - வேம்பு**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. ஓமாந்ததூர் முத்துராஜாக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் அவர் சுயமாக சம்பாதித்து வாங்கிய சொத்தாகும். யாரிடமிருந்து மேற்படி சொத்தை கிரையம் பெற்றார் என்றால் அது பற்றி தெரியவில்லை. மேற்படி கிரையப் பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்துக்களுக்கு தெற்கே கிழமேல் ரோடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு வடக்கே மணிவேல் என்பவரின் சொத்து உள்ளது. மேற்படி மணிவேல் சொத்து என்பது ஓமாந்தூரிடமிருந்தும் குமரவேல் என்பவரிடமிருந்தும் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். மணிவேல் சொத்திற்கு வடக்கே யார் சொத்து உள்ளது என்றால் திருமலை என்பவர் சொத்து உள்ளது.

2. வடக்கே திருமலை சொத்திலிருந்து தென்புறம் கிழமேல் ரோடு வரை உள்ள சொத்து எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளது என்று சொல்கிறேன் என்றால் சரிதான். எனது தந்தையின் சொத்துக்களுக்கு மேற்புறம் வெங்கடாசலம் சொத்தும் மற்றும் கிழமேல் ரோடும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிழமேல் ரோடானது தாவா சொத்திற்கு மேல்புறமாக சற்று வடபுறம் திரும்பி மீண்டும் மேல்புறம் செல்கிறது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கே உள்ள கிழமேல் ரோடு தற்போது நேராக மேல்புறம் நோக்கி யும் செல்கிறது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழ்புறமாக எனது தந்தையின் இதர சொத்துக்கள் உள்ளது. ஆரம்பத்தில் தாவா சொத்துக்கள் சர்வே எண்.96/2 மற்றும் 96/3 ல் கட்டுப்பட்டது என்றால் சரிதான்.

3. பிரதிவாதி மௌன்ட் கீரிஸ் பள்ளி ஒன்று நடத்தி வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்தின் தென்புறத்தில் கீழ்பகுதியில் மேற்படி பள்ளியின் வாசல் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பள்ளியில் சுமார் 1000 மாணவர்கள் படிப்பார்களா என்றால் படிப்பார்கள். மேற்படி பள்ளி வாசற்படியிலிருந்து தென்வடலாக 3 அடி அகலமுள்ள இடத்தை கடந்து தான் கிழமேல் ரோட்டிற்கு வரமுடியும் என்றால் சரிதான். மேற்படி கிழமேல் ரோடு என்பது அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை. மேற்படி கிழமேல் ரோட்டிற்கு எங்கள் பேரில் பட்டா உள்ளது. மேற்படி கிழமேல் ரோட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.3B ஆகும். மேற்படி

சர்வே எண் 3B க்கு தென்புறம் கிழமேல் ரோடு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள கிழமேல் ரோடு தார் சாலையா என்றால் சரிதான். மேற்படி தார் சாலை எத்தனை வருடங்களாக உள்ளது என்றால் சுமார் 25 வருடங்களாக தார் சாலையாக உள்ளது.

4. மேற்படி தார் சாலையில் தான் ஐய்யர்மலையிலிருந்து செல்லும் பேருந்துக்கள் அதன் வழியாக தான் செல்லும் என்றால் சரிதான். மேற்படி தார் சாலை அமைப்பதற்கு முன்பு அதில் சாதாரண மண் ரோடு இருந்தது என்றால் சரிதான். எனது தந்தை 1996 ம் வருடம் இறந்துவிட்டார். எனது தந்தை இறப்பதற்கு எத்தனை வருடங்களுக்கு முன்பு ரோட்டிற்கு நிலம் கொடுத்தார் என்றால் 1995 ம் வருடம் மேற்படி ரோட்டிற்காக நிலத்தை விட்டுக்கொடுத்தார். அதன்பிறகு தான் எனது தந்தையும், எனது தம்பியும் சேர்ந்து பிரதிவாதிக்கு ஒரு சொத்தை விற்றார்கள் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதிக்கு விற்ற சொத்து ஓமாந்தூரார் அனுபவத்திலும், குமரவேல் அனுபவத்திலும் இருந்து வந்தது என்றால் சரிதான்.

5. மேற்படி இருவரும் தான் சேர்ந்து கிரையம் செய்த சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதியின் வசம் ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதிக்கு விற்ற கிரைய பத்திரம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். ஆனால் தேதி தெரியாது. மேற்படி கிரையம் பெற்ற சொத்துக்களை கிரையத்திற்கு பின்னிட்டு பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி சொத்தில் தான் பிரதிவாதி பள்ளி கட்டியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பள்ளியில் தான் சுமார் 1000 மாணவர்கள் படிக்கிறார்கள் என்றால் சரிதான். மேற்படி 1000 மாணவர்கள் தாவா சொத்தை கடந்து தான் தினமும் பள்ளிக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கே உள்ள ரோட்டிற்கும் பள்ளியின் சுற்று சுவருக்கு இடைய தென்வடலாக சுமார் எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால் சுமார் 5 அடி இருக்கும். அது முக்கோண வடிவில் உள்ளது.

6. மேல்புறம் 5 அடியும் கிழக்கே 3 அடியும் இருக்கும். பள்ளியின் சுற்றுசுவர் எத்தனை அடி இருக்கும் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி பள்ளி எப்போது கட்டப்பட்டது என்றால் சரியாக தெரியவில்லை. மேற்படி பள்ளி எத்தனை வருடங்களாக உள்ளது என்றால் சுமார் 10 முதல் 15 வருடங்கள் இருக்கலாம். மேற்படி

10 வருடங்களாகவும் பள்ளியின் சுற்றுசுவர் உள்ளது என்றால் இல்லை. தாவா தாக்கல் செய்வதற்கு சுமார் 4 வருடங்களுக்கு முன்பு தான் சுற்று சுவர் எழுப்பப்பட்டது. பள்ளி கட்டியதலிருந்தே தாவா சொத்தை கடந்து தான் மாணவர்கள் பள்ளிக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். எனது தந்தை எனக்கு உயில் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. எனது தந்தையின் சொத்தை பாகப்பிரிவினை செய்து கொண்டோமா என்றால் இல்லை. தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

**Additional District Munsif,**
**Kulithalai.**

**அசல் வழக்கு எண். 52/2019** **தேதி-26.06.2025**

**வா.சா.2 - அய்யாத்துரை**

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. பெரியாத்தாள் மற்றும் கோகிலா எனக்கு என்ன உறவு என்றால் பெரியாத்தாள் எனது மாமாவின் மனைவி ஆவார். கோகிலா பெரியாத்தாளின் மகள் ஆவார். எந்த வருடம் சர்வே எண்.1539/1 நிலத்தை நான் கிரையம் பெற்றேன் என்றால் 2001ம் வருடம் கிரையம் பெற்றேன். அதன் விஸ்தீரணம் 67 செண்ட் ஆகும். வா.சா.ஆ.11 ஆவணத்தின் கிரைய தொகை ரூ.46000/- என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கிரையதன்றே மேற்படி ரூ.46000/-யை கிரையதாரிக்கு சாட்சிகள் முன்னிலையில் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மேற்படி தொகையை நான்கிரையம் கொடுத்தவர்களுக்கு கொடுக்கவில்லை.

2. மேற்படி சொத்தை 30.11.2011ல் 2ம் வாதி கோகிலா கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.12 கிரையத்தின் கிரைய தொகை ரூ.23000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தில் உள்ள நிலத்தின் விஸ்தீரனம் 23 ½ சென்ட் நிலம் மேற்படி 2ம் வாதிக்கு நான் கிரையம் செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணம் சாட்சிகள் முன்னிலையில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மீதியுள்ள நிலத்தை யாருக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் எனது நிலத்திற்கு அருகில் உள்ள ஒரு நாயக்கருக்கு மீதியுள்ள 44 ½ சென்ட் நிலத்தை வா.சா.ஆ.12 ஏற்பட்ட தேதியான 30.11.2011ம் தேதியிலேயே கிரையம் செய்து கொடுத்தேன். மேற்படி கிரையத்தின் கிரைய தொகை என்ன என்றால் எனக்கு நியாபகம் இல்லை.

3. மேற்படி பத்திரத்தை பார்த்தால் தான் தெரியும். 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து வாதிகள் எந்த தேதியில் பதிவுசெய்யப்பட்ட குத்தகை எழுதி கொடுத்தார்கள் என்றால் நான் கிரையம் பெற்ற தேதியான 03.12.2001ம் தேதியில் குத்தகைக்கு கொடுத்தார்கள். மேற்படி குத்தகை பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் நியாபகம் இல்லை. மேற்படி குத்தகை பத்திரத்தில் நான் சாட்சியம் செய்யவில்லை என்றும், அந்த பத்திரத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை குத்தகைக்கு பெற்ற நாளிலிருந்து இன்று வரை அவர் தான் குத்தகை செய்து வருகிறார் என்றால்

சரியல்ல.

4. வா.சா.ஆ.11 ல் குறிப்பிட்டுள்ள கிரைய தொகைகளை நான் கொடுக்கவில்லை என்றும், வா.சா-ஆ.12 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள கிரைய தொகையை உண்மையாக நான் வாங்கவில்லை என்றும், பெயரளவில் மேற்படி ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டன என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட குத்தகை பத்திரமானது பெயரளவில் ஏற்பட்டதாக நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த வருடம் 2 ம் வாதி மின்னிணைப்பு பெற்றுள்ளார் என்றால் 2023 -2024 ம் ஆண்டு காலகட்டத்தில் மின்னிணைப்பு பெற்றுள்ளார்.

5. மேற்படி மின்னிணைப்பானது 1ம் பிரதிவாதி கொடுத்த பணத்தை வைத்து தான் செலுத்தப்பட்டது என்றால் சரியல்ல. சமாது தோட்டம் என்ற நிலத்தை வாதி வகையறாவால் எனக்கு எந்த வருடம் இனாமாக கொடுக்கப்பட்டது என்றால் எனது அம்மாவிற்கு சீர் வரிசை செய்யாத காரணத்தினால் வாதி வகையறாவால் அவர்கள் கூட்டு குடும்பமாக இருந்து சொத்தை அனுபவித்து வந்த காலத்தில் 98 சென்ட் நிலமானது கொடுக்கப்பட்டது. நாளது தேதிவரை தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் குத்தகைக்கு உள்ளது என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

**Additional District Munsif,**
**Kulithalai.**